# திணை

1. திணையை எத்தனை வகையாக பிரிக்கலாம்

A) 1

B) 2

C) 3

D) 4

2. **ராமன் காட்டுக்குச் சென்று வேட்டையாடினான்**.

கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் **இடப்பெயரைக்** குறிக்கும் சொல் எது


A) ராமன்

B) வேட்டையாடினான்

C) காட்டுக்குச்

D) சென்று

3. **பலர்பாலைக்** குறிக்கும் படத்தைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| A | B | C | C |

4.சினைப் பெயரைக் குறிக்கும் படம் எது

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| I | ii | iii | iv |

LIVEWORKSHEETS

A. i , ii

B. ii , iii , iv

C. i , iii , iv

D. i , iv

5. **உழவன் உளுகின்றான்**

மேலே கொடுக்கப்பட்ட வாக்கியம் **எந்த** வேற்றுமை உருபைக் கொண்டுள்ளது.

A)இரண்டாம் வேற்றுமை

B)நான்காம் வெற்றுமை

C)முதலாம் வேற்றுமை

D)ஆறாம் வெற்றுமை

6. மூன்றாம் ஆம் வேற்றுமை உருபு பயன்படுத்தப்படாத வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A)ராமன் வாளால் பாம்பை வெட்டினான்

B)இலச்சுமணன் இராமனோடு காட்டிற்குச் சென்றான்

C)சோழ மன்னர் பல கோவில்களைக் கட்டினார்.

7)

ஒரு தெருவில் இரு இளைஞர்கள் பேசிக்கொண்டு நடந்து சென்றனர். அவர்களுக்கு முன் ஒரு பசு அசைந்து அசைந்து சென்று கொண்டிருந்த்து. அவர்கள் ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தனர். அவர்களுக்குப் பின்னால் ஒரு சிறுமி அழுதுக்கொண்டிருந்தாள். அவளுக்கு முன் இரண்டு நாய்க்குட்டிகள் விளையாடிக்கொண்டிருந்தன.

கொடுக்கப்பட்ட கதையில் உள்ள பால் வகைகளை வரிசைப்படுத்தி எழுதுக.

A)ஆண்பால் , ஒன்றன் பால், பெண்பால், பலவின்பால்.

B)ஒன்றன்பால் , பலர்பால் , பலவின்பால் , பெண்பால்

C)பலர்பால் , ஒன்றன்பால் , பெண்பால் , பலவின்பால்.

LIVEWORKSHEETS

8) ஒரு **குயவன்** பல மட்பாண்டங்களைச் செய்து விற்றுவந்தான்.

கோடிட்ட சொல்லுக்கு ஏற்ற பெண்பால் சொல்லை எழுதுக.

A)குயவள்

B)குயத்தி

C)குறத்தி

9) தன் தோட்டத்தில் பசுமையாக இருந்த பயிர்களை மேய்ந்துகொண்டிருந்த மாடுகளைக் கண்ட ராமு அவற்றை விரட்டினான். அந்த மாடுகள் மிரண்டு அங்கும் இங்கும் ஓடின.

மேலே உள்ள கூற்றில் பண்புப்பெயரைக் குறிக்கும் சொல் எது

A)தோட்டத்தில்

B)பயிர்கள்

C)பசுமை

D)மாடுகள்

10) சரியான இறந்தகாலத்தைக் காட்டும் வாக்கியத்தைத் தேர்ந்தெடு.

A)வேகமாக ஓடிய மானை இராமன் விரட்டிப் பிடித்தான்.

B)மாணவர்கள் திடலில் காற்பந்து விளையாடிக்கொண்டிருக்கின்றனர்.

C)மாலதி வாசலில் கோலம் போடுவாள்

11) தோட்டத்தில் பலர் மரங்களை வெட்டிச் சுத்தம் செய்து கொண்டிருக்கின்றனர்.

கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் காலத்தைக் காட்டும் சொல் எது

A) தோட்டத்தில்

B) செய்து கொண்டிருக்கின்றனர்

C) மரங்களை

D) சுத்தம்

LIVEWORKSHEETS

12) அந்தச் செல்வந்தர் மகிழ்ந்து போனார். தன் தோட்டத்து மரத்தில் பழுத்திருந்த மாம்பழங்களை ராமுவிற்கு உண்ணக் கொடுத்தார்.

கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் சினப்பெயரைக் குறிக்கும் சொல் எது

A) செல்வந்தர்

B) மாம்பழம்

C) தோட்டத்தில்

D) பழுத்திருந்த

13) பிப்ரவரி வந்துவிட்டாலே அந்த நகரம் குதூகலமாகிவிடும். பறவைகள், விலங்குகள், கட்டடங்கள் எனப் பல திடீர் உருவங்கள் தெருக்களில் உருவாகும். அவை எல்லாமே எலுமிச்சை, ஆரஞ்சுப் பழங்களால் உருவாக்கப்பட்டவை.

கொடுக்கபட்ட வாக்கியத்தில் காலத்தைக் காட்டும் சொல்லைத் தேர்ந்தெடு.

A) பறவைகள்

B) பிப்ரவரி

C) நகரம்

D) பழங்கள்

14) கீழ்க்காணும் வாக்கியத்தில் படர்க்கை வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A)நான் புத்தகம் வாங்கினேன்.

B)மாணவர்கள் சபைக்கூடலில் நின்றனர்.

C)உன் நலத்தைப் பேண்.

LIVEWORKSHEETS

15) கீழ்க்காணும் வாக்கியத்தில் கோடிடப்பட்ட சொல்லின் வேற்றுமை உருபு வகையைத் தெரிவு செய்க.

நகுலன் தன்னுடைய பேச்சுத் **திறமையால்** போட்டியில் வெற்றிப் பெற்றான்.

A)முதலாம் வேற்றுமை

B)மூன்றாம் வேற்றுமை

C)நான்காம் வேற்றுமை

16)கொடுக்கப்பட்ட சொல்லுக்கு ஏற்ற பன்மை சொல்லை எழுதுக.

**நாற்காலி**

A)நாட்காளிகள்

B)நால்காளிகள்

C)நாற்காலிகல்

D)நாற்காலிகள்

17) சரியான இனவெழுத்தைக் கொண்டுள்ள சொல்லைத் தெரிவு செய்க.

A)அஞ்சலகம்

B)தென்ரல்

C)கூன்தல்

18. இறந்த காலத்தைக் காட்டும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A)செல்வம் திடலில் பந்து விளையாடுகிறான்.

B)சாலனி நூலகத்தில் கதை புத்தகம் படித்தாள்.

C)லோசினி பள்ளிக்கூடத்திற்குச் செல்வாள்.

LIVEWORKSHEETS

19. மலேசிய வாசுதேவன் பல மேடைகளில் பல சிறந்த பாலட்களைப் **பாடினார்**.

மேலே உள்ள வாக்கியத்தில் கோடிடப்பட்டுள்ள சொல் எவ்வகை பெயர்ச்சொல்லைக் கொண்டுள்ளது.

A)காலப்பெயர்

B)தொழில்பெயர்

C)இடப்பெயர்

D)சினப்பெயர்

20) ஒரு தெருவில் இரு இளைஞர்கள் பேசிக்கொண்டு நடந்து சென்றனர். அவர்களுக்கு முன் ஒரு பசு அசைந்து அசைந்து சென்று கொண்டிருந்த்து. அவர்கள் ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தனர். அவர்களுக்குப் பின்னால் ஒரு சிறுமி அழுதுக்கொண்டிருந்தாள். அவளுக்கு முன் இரண்டு நாய்க்குட்டிகள் விளையாடிக்கொண்டிருந்தன.

கொடுக்கப்பட்ட கதையில் உள்ள திணையை வரிசைப்படுத்தி எழுதுக.

A) உயர்திணை, அஃறிணை, உயர்திணை, அஃறிணை

B) அஃறிணை , உயர்திணை , அஃறிணை, உயர்திணை

C) அஃறிணை, அஃறிணை, உயர்திணை, உயர்திணை.

21. பட்டியலுக்கேற்ற திணையைத் தெரிவு செய்க.

* வண்ணத்துப்பூச்சி
* தபால்காரர்
* புறா
* தொலைகாட்சி

A. உயர்திணை , அஃறிணை , உயர்திணை ,அஃறிணை

B. அஃறிணை , உயர்திணை , அஃறிணை , அஃறிணை

C. உயர்திணை , உயர்திணை , உயர்திணை , அஃறிணை

D. அஃறிணை , அஃறிணை , அஃறிணை , அஃறிணை

LIVEWORKSHEETS

22. சரியான திணைத் தொகுதியைத் தெரிவு செய்க.

i. மீன் , தெய்வம் , மரம்

ii. புறா , திருவள்ளுவர் , ஆலயம்

iii குழந்தை , தம்பி , சிலை

A. உயர்திணை , உயர்திணை , அஃறிணை

B. அஃறிணை , உயர்திணை , உயர்திணை

C. உயர்திணை , உயர்திணை , அஃறிணை

23. அஃறிணை வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A. நிர்மல் திடலில் பந்து விளையாடினான்.

B. தன் மீது ஏறி விளையாடிய சுண்டெலியைக் கண்டு சிங்கம் கர்ஜித்தது.

C. டாக்டர் மு. வரதராசனார் பல நூல்களை இயற்றியுள்ளார்.

24. உயர்திணை வாக்கியத்தை தெரிவு செய்க.

A. செடியில் மலர்கள் பூத்துக் குலுங்கின.

B. குமுதன் இனிமையாகப் பாடினான்.

C. நான்கு எருதுகளும் ஒற்றுமையாக இருந்தன.

25. கோடிடப்பட்ட சொற்களுள் உயர்திணையைக் குறிக்கும் சொல் யாது?

<u>பஞ்சபாண்டவர்கள்(i)</u> சூதாட்டத்தில் <u>நாட்டையும்</u>(ii) <u>வீட்டையும்</u>(iii) இழந்து தங்கள் <u>மனைவியுடன்</u>(iv) வனவாசம் மேற்கொண்டனர்.

A. i , ii | C. ii , iii

B. i , iv | D. iii , iv

26. கீழ்காண்பனவற்றுள் எவை அஃறிணையாகும்?

i வண்டி ii வாழைமரம் iii மாணவன் iv புத்தகம்

A. i , ii , iii | C. i , iii , iv

B. i , ii , iv | D. ii , iii , iv

27. கோடிட்ட சொற்களுள் எஃது அஃறிணையைக் குறிக்கிறது?

<u>திவ்யா</u> கோவிலுக்குச் சென்று <u>இறைவனைத்</u> தரிசித்து <u>இல்லம்</u> திரும்பினார்.

A B C

LIVEWORKSHEETS

28. உயர்திணையைக் குறிக்கும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A. மீன்கள் நீந்தின.

B. தமிழரசி சமைத்தாள்.

C. பறவை பறந்தது.

29. கீழ்க்காணும் வாக்கியத்தில் கோடிடப்பட்ட சொற்களில் உயர்திணையைத் தெரிவு செய்க.

பூர்த்தி செய்யப்பட்ட <u>பாரங்கள்</u> (i) தலைமை <u>ஆசிரியர்</u> (ii) வாயிலாக <u>செயலாளர்</u> (iii) முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி தலைவர் <u>நாதன்</u> (iv) கேட்டுக்கொண்டார்.

A. i, ii, iii

B. i, ii, iv

C. i, iii, iv

D. ii, iii, iv

30. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியானதைத் தெரிவு செய்க.

A. பறவைகள் இரையைக் கொத்தித் தின்று மகிழ்ந்தனர்.

B. பார்வையாளர்கள் தங்களது இருக்கைகளில் அமர்ந்தனர்.

C. பாடகர் பாடி இரசிகர்களை மகிழ்வித்தது.

D. பட்டங்கள் வானில் அசைந்தாடிப் பறந்தனர்.

31. கீழ்க்காணும் வாக்கியத்தில் கோடிடப்பட்டுள்ள சொற்களில் சரியானதைத் தெரிவு செய்க.

என் <u>தந்தையார்</u> (i) இறைவனுக்குச் சூட <u>மலர்</u> (ii) <u>மாலை</u> (iii) ஒன்று வாங்கி வந்து <u>தாயாரிடம்</u> (iv) கொடுத்தார்.

A. i, ii

B. i, iv

C. ii, iii

D. ii, iv

32. <u>வருந்தினர்</u> - இச்சொல் குறிக்கும் சரியான இலக்கணக் கூறுகளைத் தெரிவு செய்க.

A. ஆண்பால் - உயர்திணை

B. பெண்பால் - உயர்திணை

C. பலர்பால் - உயர்திணை

D. பலவின்பால் - உயர்திணை

LIVEWORKSHEETS

33. கீழ்க்காண்பனவற்றுள் எஃது உயர்திணையாகும்?

i ஆமை , ii கோவிந்தன் , iii குதிரை , iv மாணவன்

A. i , ii

C. iii , iv

B. ii , iv

34. கோடிடப்பட்ட சொல் எதனைக் குறிக்கிறது?

நேற்று மாலை வீசிய பலத்த காற்றால் என் தோட்டத்திலுள்ள மூன்று ரம்புத்தான் மரங்கள் முறிந்து விழுந்தன.

A. ஒருமை

C. அஃறிணை

B. இணைமொழி

35. கீழ்க்காணும் இணைகளில் எவை அஃறிணையாகும்?

A. கடிதம் , தாதி

C. மாரியம்மாள் , முருகன்

B. முகிலன் , அகிலன்

D. பொரித்த கோழி , விமானம்

LIVEWORKSHEETS